# க.பொ.த(உ/த)ப் பரீட்சை

## பாடம் : இந்து நாகரிகம் (46T) - 1

**தரம் : 13(2020)** **நேரம் : 2 மணித்தியாலங்கள்**

**பகுதி- 1**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01 – 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

01. சிவனை " பிறவா யாக்கைப் பெரியோன் " எனக் குறிப்பிடும் நூல்:
(1) சிலப்பதிகாரம் (2) மணிமேகலை (3) தொல்காப்பியம் (4) திருமந்திரம்
(5) சிவஞானபோதம்

02. " அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் " எனக் குறிப்பிடும் நூல்:
(1) ஆத்திசூடி (2) கொன்றைவேந்தன் (3) மூதுரை (4) நல்வழி (5) திருக்குறள்

03. பஞ்ச கிருத்திய ஐந்தொழில் தத்துவத்தைக் காட்டும் சிவமூர்த்தம்:
(1) தட்சணாமூர்த்தி (2 )நடராஜர் (3) அர்த்தநாரீஸ்வரர் (4) பிச்சாடனர் (5) சந்திரசேகரர்

04. :பத்துமலை முருகன் ஆலயம் அமைந்துள்ள தென்கிழக்காசிய நாடு:
(1) கம்போடியா (2) தாய்லாந்து (3) ஜாவா (4) மலேசியா (5) பர்மா

05. சதசத்து என அழைக்கப்படுவது:
(1) பதி (2) பசு (3) பாசம் (4) ஆணவம் (5) மாயை

06. தன்னை " சைவசித்தாந்த மார்க்கி " எனக் கல்வெட்டில் பெறித்த பல்லவ மன்னன்:
(1) மகேந்திரவர்மன் (2) மாமல்லன் (3) இராஜசிம்மன் (4) நந்திவர்மன் (5) இராஜராஜசோழன்

07. ஐவகைப்பேதங்களைக் கூறி வேதாந்தக் கோட்பாட்டை நிறுவிய வேதாந்தி:
(1) மத்துவர் (2) பாதராஜனர் (3) இராமானுஜர் (4) சங்கரர் (5) நீலகண்டர்

08. பேதாபேத கோட்பாட்டினை கூறும் வேதாந்தம்:
(1) அத்வைதம் (2) விசிட்டாத்வைதம் (3) துவைதம் (4) சுத்தாவத்தை (5) சகலாவத்தை

09. பாதராஜனர் எழுதிய நூல்:
(1) ஸ்மிருதி (2) வாயுபுராணம் (3) பிரமசூத்திரம் (4) சகளதிகாரம் (5) அபிநயதர்பணம்

10. " பற்றுக்களுடன் வாழும் ஒருவன் அப்பற்றுக்களை அறுக்க அப்பற்றுக்களுடனேயே பிறக்கிறான் " எனக் கூறும் உபநிடதம்:
(1) தைத்திரிய (2) பிரசன்ன (3) கேன (4) கடோப (5) முண்டக

11. “ சைவ சமயமானது சிவபரம் பொருளால் உருவாக்கப்பட்ட அதேவேளை சிவபரம் பொருளை விளக்குவது “ எனக் கூறும் ஆகமம்:
(1) காமிகம் (2) வாதுளம் (3) காரணம் (4) வைகாசனம் (5) விமலம்

12. “ ரிதத்தை மீறுபவர் பொய் வாழ்விற்கும் உட்படுவர் “ எனக் கூறும் சூக்தம்:
1. புரஷ (2) வருண (3) நாசதீய (4) பிரமச்சரிய (5) முனி

13. சாமீப முத்தியடைந்த நாயனார்:
(1) அப்பர் (2) சுந்தரர் (3) சம்பந்தர் (4) திலகவதியார் (5) கண்ணப்பர்

14. “ தேசிகமணி “ என்னும் பட்டத்திற்கு உர்த்தானவர்:
(1) விபுலாநந்தர் (2) ஆறுமுகநாவலர் (3) சேர் பொன் இராமநாதன் (4) அருணாசலதேசிகர் (5) ஞானப்பிரகாசர்

15. “ விதித்தன செய்தலும் விலக்கயன ஒழித்தலும் “ எனத் தர்மம் பற்றி கூறும் நூல்::
(1) விஷ்ணுஸ்மிருதி (2) மனுஸ்மிருதி (3) சாந்தோக்கிய உபநிடதம் (4) பகவக் கீதை (5) சிலப்பதிகாரம்

16. “ நூல் முறை தெரிந்து சீலத்து ஒழுகு ” எனக் கூறியவர்::
(1) உலகநாதர் (2) சுவாமி விவேகானந்தர் (3) பாரதியார் (4) திருவள்ளுவர் (5) ஔவையார்

17. அறிவியல் கோட்பாட்டில் “ நீள் வட்டப் பாதை நாட் கணிப்பு “ பற்றிய விடயம் அடங்குவது:
(1) பிதாமஹ கோட்பாடு (2) புளிஷக் கோட்பாடு (3) சூரியக் கோட்பாடு (4) புவியீர்ப்புக் கோட்பாடு (5) கிரகணக் கோட்பாடு

18. “ சரசோதி மாலை ” எழுந்த காலம்:
(1) அனுராதபுர காலம் (2) பொலன்னறுவைக் காலம் (3) சோழர் காலம் (4) ஆரியசக்கரவர்த்திகள் காலம் (5) நாயக்கர் காலம்

19. “ மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ் “ பாடியவர்:
(1) தாயுமானவர் (2) குமரகுருபரர் (3) அபிராமிபட்டர் (4) அருணகிரிநாதர் (5) கச்சயப்பர்

20. விஜயநகர ஆட்சியில் வீரசைவக் கோட்பாட்டினைக் கூறும் நூல்:
(1) மச்சபுராணம் (2) கந்தபுராணம் (3) வசப்புராணம் (4) பதுமபுராணம் (5) விஷ்ணு சிந்தியம்

21. வைகாசனம் என்னும் வைணவ அகமத்தை தொகுத்தவர்:
(1) விகாணஸ் (2) வியாகர் (3) மகரிஷி (4) பாதராஜனர் (5) மனு

22. பூசலார் நாயனார் வரலாற்றுடன் தொடர்புடைய மன்னன்:
(1) இராஜசிம்மன் (2)மாமல்லன் (3)பரமேஸ்வர வர்மன் (4)இராஜேந்திரன் (5) குலோத்துங்கன்

23. பண்டுல என்னும் பிராமணனிடம் கல்வி கற்ற மன்னன்:
(1) துட்டகைமுனு (2) பண்டுகாபயன் (3) எள்ளாலன் (4) விஜயன் (5) கஜபாகு

24. குளக்கோட்டன் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் திருப்பணி பற்றி அறிய உதவும் ஆதாரம்::
(1) கோயிற் புராணம் (2) சரசோதி மாலை (3) பசவ புராணம்
(4) ஸ்ரீதட்சணகைலாய புராணம் (5) சிவராத்திரி புராணம்

25. சிவனது மகத்துவத்தைக் கூறும் சிவானந்தலகரி என்னும் நுஸலை இயற்றியவர்:
(1) சங்கரர் (2) இராமானுஜர் (3) மத்துவர (4) பாஸ்கரர் (5) தன்வந்திரி

26. வானியல் வரலாற்றுக்குப் பயன்னடும் " பஞ்சசிந்தாந்திகா " என்ற தொகுப்பு நூலை வெளியிட்டவர்::
(1) புளிஷர் (2) காளிதாசர் (3) வராகமிகிரர் (4) ஆரியப்பட்டர் (5) வசிஷ்டர்

27. இந்திய மருத்துவத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர்:
(1) ஆந்திரேயர் (2) சரகர் (3) தன்வந்தரி (4) சுஸ்ருதர் (5) சங்கரர்

28. தென்திசை மேரு என அழைக்கப்படும் கோயில்:
(1) சிதம்பரம் (2) தஞ்சை கோயில் (3) கங்கைகொண்டசோழேச்சரம்
(4) காஞ்சி கைலாசநாதர் (5) மதுரைமீனாட்சி

29. இந்து - இஸ்லாமிய சமயத்தவர்களின் உறவுப் பாலமாக விளங்கிய வடஇந்திய பக்தி நெறியாளர்:
(1) ஸ்ரீசைதன்னியர் (2) கபீர்தாசர் (3) துளசிதாசர் (4) மீராபாய் (5) இராமானந்தர்

30. இந்திய பௌத்தறிவு வாதத்தின் தந்தையெனப் போற்றப்பட்ட நவீன இந்து சமய சீர்திருத்தவாதி:
(1) தயானந்த சரஸ்வதி (2) விவேகானந்தர் (3) இராஜாராம் மோகன்ராய்
(4) குருநானக் (5) பாரதியார்

31. பல்லவ மன்னனன் மகேந்திரவர்மனின் ஆழ்ந்த சிவபக்தியைப் புலப்படுத்தும் கல்வெட்டு:
(1) திருச்சிராப்பள்ளி (2) குடுமியாமலை (3) சங்கபால (4) சங்கமுவ (5) தோணிகல

32. ஐயடிகள் காடவர்கோன் என்று புகழபெற்ற சைவ அடியார்:
(1) சேரமான்பெருமான் (2) சுந்தரர் (3) மூன்றாம் சிம்மவர்மன் (4) சிம்மவிஷ்ணு
(5) பரமேஸ்வரவர்மன்

33. விருபாட்சகர் கோயில், விட்டலாசுவாமி கோயில் அமைக்கப்பட்ட காலம்:
(1) சங்ககாலம் (2) அறநெறிக்காலம் (3) பல்லவர்காலம் (4) சோழர்காலம் (5) நாயக்கர்காலம்

34. சிவஞானமுனிவர், கச்சியப்பமுனிவர் இயற்றிய நூற்தொகுதி:
(1) காஞ்சி புராணம், தணிகை புராணம் (2) திருவிளையாடற் புராணம், கந்த புராணம்
(3) ஏகாதசி புராணம், கந்த புராணம் (4) சிவராத்திரி புராணம், வசப் புராணம்
(5) திருவிளையாடற் புராணம், தல புராணம

35. சோழர் காலத்தில் தேவாரங்கள் பண்ணோடு ஓதுவோரை இவ்வாறு அழைப்பர்:

(1) தலைக்கோலிலி (2) பிடாரர்கள் (3) பண்ணிசையாளர்கள் (4)வித்தகர் (5) கவிஞர்

36. பெரிய கவி எனச் சிறப்பிக்கப்படும் குப்த மன்னன்: :

(1) சந்திரகுப்தன் (2) சமூத்திரகுப்தன் (3) ஸ்கந்தகுப்தன் (4) குமாரகுப்தன் (5) புதகுப்தன்

37. " கிருஸ்தவ கண்டனகுமாரி " என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்:

(1) காசிவாசிசெந்திநாதையர் (2) ஞானப்பிரகாசர் (3) சேக்கிழார் (4) சிவப்பிரகாசர்

(5) தாயுமானவர்

38. கந்தரந்தாதி பாடிய மெய்யடியார்:

(1) கச்சியப்பர் (2) தாயுமானவர் (3) அபிராமிப்பட்டர் (4) அருணகிரிநாதர் (5) நம்மாழ்வார்

39. ஆகந்துக மலம் எனப்படுவது:

(1) ஆணவம் (2) கன்மம் (3) பதி (4) பசு (5) பாசம்

40. பிரபோதசைத்தன்யர் என்னும் பிரமச்சரிய நாமம் சூட்டப்பட்டவர்:

(1)ஆறுமுகநாவலர் (2)மெய்கண்டார் (3)பரஞ்சோதிமுனிவர் (4)விவேகானந்தர் (5)விபுலானந்தர்

**41 தொடக்கம் 45 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை அட்டவணையிலிருந்து தெரிவு செய்க:**

| I | II | III | IV |
|---|---|---|---|
| A<br>கல்வெட்டுக்கள் | F<br>சேயோன் | K<br>மகத்திரம் | P<br>தேசியவீரர் |
| B<br>ஓமகுண்டம் | G<br>நாயன்மார் பாடியவை | L<br>நாணயங்கள் | Q<br>தட்சணை |
| C<br>நல்லூர் | H<br>தூண்சாசனம் | M<br>வெறியாட்டு | R<br>இராஜராஜேஸ்வரம் |
| D<br>மாயோன் | I<br>அக்கினி | N<br>உலோக சிற்பங்கள் | S<br>பிறநாட்டு அறிஞர் குறிப்புக்கள் |
| E<br>சதுர்வேதிமங்கலம் | J<br>துறவு வாழ்வு | O<br>திருவாவடுதுறை | T<br>நடுகல் |

41. இந்து நாகரிகத்தின் வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்களைக் குறிப்பிடும் தொகுதி:
(1) AHLS (2) AGLR (3) BHMS (4) CILR (5) EFLP

42. யாகக் கிரியைகளில் இடம்பெறும் விடயங்களை குறிக்கும் தொகுதி:
(1) AILT (2) BIKQ (3) CHMR (4) DGOR (5) EFLT

43. சங்க காலச் சமய நெறியோடு தொடர்புடைய தொகுதி:
(1) AIMS (2) BJKP (3) DFMT (4) DILR (5) EHOQ

44. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சமய வாழ்வியலுடன் தொடர்புடைய தொகுதி:
(1) AFNQ (2) BGLR (3) CJOP (4) CJMP (5) EJOR

45. இலங்கையில் பொலன்னறுவைக்கால இந்து சமய கலை வரலாற்றோடு தொடர்புடை தொகுதி:
(1) AFNQ (2) CILT (3) DILR (4) EGNR (5) EJLT

**46 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கிழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.**

46. இந்து நாகரிகத்தின் தனித்துவமும் சிறப்பும்:

(1) உலக நாகரிகங்களின் வரிசையில் இந்து நாகரிகம் புகழ் பெற்றது.
(2) இதன் தொன்மைக்கு வேத இலக்கியங்கள் சான்றாகும்.
(3) இந்து நாகரிகம் சமயம், தத்துவம், கலை, சமூகம், அறிவியல் சிறப்புடையது.
(4) இந்துக்களின் அரசியல் பற்றிய செய்திகள் மிகக் குறைவாக உள்ளது.
(5) திருக்கோயில் பண்பாட்டின் சிறப்பினைக் கொண்டது.

47. இலங்கையில் இந்து சமய வளர்ச்சிக்கு ஊடகங்களின் பங்களிப்பு

(1) பத்திரிகைகள் மூலம் சமயஞ் சார்ந்த விடயங்கள் வெளியிடப்படுகின்றன.
(2) ஊகம், கற்பனை முதலியவற்றையும் ஊடக வெளியீடுகளில் உண்டு.
(3) ஊடகத்துறை மனிதன் பரந்த சமய அறிவை பெற உதவும்.
(4) ஊடகம் நல்வாழ்விற்கு பல தகவல்களை வழங்குகின்றது.
(5) இலங்கையில் ஊடகத்துறை இந்துசமய பண்பாடு வளர்ச்சி பெற உதவுகிறது.

48. சிவாகமங்கள் வளம்படுத்திய திருக்கோயில் வழிபாடு:

(1) சிவாகமங்கள் பதினெட்டு ஆகும்.
(2) திருக்கோயில் அமைப்பு பற்றி கூறும்.
(3) கிரியா பாதம் திருக்கோயில் அமைப்பு, பிரதீஷ்டை, உற்சவம் பற்றி கூறும்.
(4) கர்ஷனம் ஆலயம் அமைக்கும் நிலத்தை தெரிவு செய்தலைக் கூறும்.
(5) ஆகமம், சரியா, கிரியா, யோகா, ஞானா பாதங்களை உள்ளடக்கியது.

49. மலேசியாவில் இந்துப் பண்பாடு:

(1) பத்துமலை முருகன் கோயிலில் உள்ளது.
(2) அவனிநாராயணன் கோயிலில் உள்ளது.
(3) மிக உயரமான முருகன் சிலை உள்ளது.
(4) சொர்ணபூமி, சொர்ணதீபம் என அழைக்கப்படுகிறது.
(5) அங்கோர்வாட் சிவாலயம் உள்ளது.

50. புராணங்கள் இந்துப் பண்பாட்டின் கருவூலம்:

(1) புராணங்கள் தென்னாட்டு இந்து சமய மரபில் செல்வாக்குச் செலுத்தவில்லை.
(2) குப்தர் காலத்தில் இறுதி வடிவம் பெற்றது. (3) பஞ்சலக்கணங்கள் உழைடயது.
(4) புராணங்கள் பழமை எனப் பொருள்படும். (5) தசலக்கணங்களைக் கொண்டுள்ளது

# க.பொ.த (உ/த)ப் பரீட்சை

## பாடம் : இந்து நாகரிகம் (46T) – II

**தரம் : 13(2020)** **நேரம் : 3 மணித்தியாலங்கள்**

பகுதி -1 இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும்,
பகுதி -11 இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும்
தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி – 1

01. இந்து நாகரிக வளர்ச்சியில் ஆகமங்களின் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க:

(அ) ஆகமம் என்பதன் பொருள் விளக்கம்.
(ஆ) ஆகமங்களின் உட்பிரிவும், அவை கூறும் விடயங்கள்.
(இ) ஆகமங்களின் வகை, அவற்றுக்கான எடுத்துக்காட்டுகள்:
(ஈ) ஆகமம் கூறும் விடயங்களும் ஆலய வழிபாட்டு முறைகளும்:

02. “ இந்துப் பண்பாட்டை வேதங்கள் வளம் படுத்தியுள்ளன “ இக்கூற்றினை மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.

(அ) வேதங்களின் அமைப்பு.
(ஆ) வேதங்கள் சுட்டும் பிரதான தேவர்கள் பற்றிய விளக்கம்.
(இ) சமய வழிபாடு.:
(ஈ) இந்து சமயத்தில் வேதத்தின் முக்கியத்துவம்.

03. பல்லவர் காலத்தில் கோயிற் கட்டடக் கலை பெற்ற வளர்ச்சியினை மேல்வருவனவற்றின் அடிப்படையில் விபரிக்குக.

(அ) அரசர்களது பங்கும் பணியும்.
(ஆ) நாயன்மார்களது பணி.
(இ) திருக்கோயில்களின் வளர்ச்சி.

# பகுதி – 11

04. " இந்து தத்துவ வளர்ச்சியில் மகத்தான பெரமைக்குரிய நூல் உபநிடதங்கள் "

இக்கூற்றின் அடிப்படையில்:

(அ) வேதசிரசு என்ற வகையில் உபநிடதங்கள் பெறும் சிறப்பு.
(ஆ) பிரமம், ஆன்மா முதலான உபநிடதம் கூறும் விடயங்கள்.
(இ) உபநிடத உரையாடலும் கற்பித்தல் யுக்தி முறைகளும்.
(ஈ) உபநிடதம் இந்து தத்துவ வளர்ச்சியில் செய்யும் பங்களிப்பு.

05. சங்கர வேதாந்தம் ஒரு தத்துவக் கோட்பாடாக உருவாகியவை. மேல்வரும் தலைப்புக்கள் தொடர்பாக ஆராய்க.

(அ) சங்கரர் வாழ்ந்த காலம்.
(ஆ) சங்கரர் ஏற்றக்கொண்ட பிரமாண நூல்கள்.
(இ) சங்கரர் பங்கும் பணியும்.
(ஈ) சங்கரர் தனது அத்வைத கோட்பாட்டினை நிறுவ கையாளும் வழிகள்.

06. இந்துக் கோயில் மரபில் விக்கிரகக் கலை பெறும் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறி, அக்கலையின் சிறப்பம்சங்களை நடராஜ விக்கிரகத்துடன் தொடர்புபடுத்தி விளக்குக.

07. " பிரமசமாஜம் என்ற நவீன இந்து சீர்திருத்தத்தின் வழி இந்து சமூகத்தை நெறிப்படுத்துவதில் சாதனை படைத்தவர் ராஜாராம் மோகன்ராய் " இக் கூற்றின் பொரத்தப்பாட்டினை ஆராய்க.

08. சைவசித்தாந்தத்தில் பதி, பசு, பாசம் முப்பொருள் கோட்பாடு பற்றி அவை கூறும் பிரமாணங்கள் சான்றாதார அடிப்படையில் நிறுவுக.